# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 28 வியாழக்கிழமை 15.08.2024 கதிர் 332







# 39 வேட்பு மனுக்களும் ஏற்கப்பட்டன! மூன்று ஆட்சேபனைகள் நிராகரிப்பு

## கடும் பாதுகாப்புக்கு மத்தியில் வந்த வேட்பாளர்கள்

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக கட்டுப்பணம் செலுத்திய 40 வேட்பாளர்களில் 39 பேர் இன்று தமது வேட்புமனுக்களை சமர்ப்பித்துள்ளதாகவும், அவர்கள் 39 பேரும் தேர்தலில் போட்டியிடத் தகுதிபெற்றுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

சுயேட்சை வேட்பாளராக போட்டியிட கட்டுப்பணம் செலுத்திய சரத் குமார குணரத்ன வேட்புமனு பத்திரத்தை சமர்பிக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார். வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் இதனைத் தெரிவித்தார்.

2 ▶



## ரணிலுக்கு சிலின்டர் சின்னம்!

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளராக போட்டியிடும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு சிலிண்டர் சின்னம் தேர்தல் திணைக்களத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் திணைக்களம் இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.

## சஜித் பிரேமதாசவுக்கு றிஷாட் ஆதரவு கட்சி எம்.பி.க்கள் ரணிலுக்கு ஆதரவு



அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு வழங்கும் என, அக்கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் நேற்று அறிவித்துள்ள நிலையில், அவரது கட்சியின் மூன்று நாடாளுன்ற உறுப்பினர்களும் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கப்போவதாக இன்று அறிவித்துள்ளார்கள்.

றிஷாட் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸை பிரதிநிதித்துவப்படுத்தும் ஐக்கிய மக்கள் சக்தியின் அனுராதபுர மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹுமான், புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் மற்றும் திகாமடுல்லை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி

2 ▶

## மக்கள் மாற்றங்களை எதிர்பர்க்கின்றார்கள்

### அநுரகுமார திஸாநாயக்க



மக்கள் எதிர்பார்க்கின்ற மாற்றத்தினை தேசிய மக்கள் சக்தியினால் மாத்திரமே ஏற்படுத்த முடியும்என கட்சியின் தலைவர் அநுர குமார திசநாயக்க தெரிவித்துள்ளார்.

மக்களிற்கு மாற்றம் மிகவும் அவசியமாக தேவைப்படுகின்றது என தெரிவித்துள்ள அவர், தேசிய மக்கள் சக்தியினால் மாத்திரமே இந்த மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலுக்காக இன்று காலை வேட்புமனுதாக்கல் செய்த பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில் இதனை குறிப்பிட்டுள்ள, அவர் கடந்தகாலங்களில் பல தேர்தல்கள் நடைபெற்றுள்ள போதிலும் மக்கள் பல வருடங்களாக துயரங்களை எதிர்கொண்டுள்ளனர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

'எங்களால் இந்த தேர்தலில் வெற்றிபெற முடியும், இந்த தேர்தலை மக்களையும் துன்பத்திலிருந்து மீட்பதற்காக காப்பாற்றுவதற்காக எங்களால் பயன்படுத்த முடியும்,தேசிய மக்கள் சக்தியால் அதன் வேட்பாளரால் மாத்திரம் இதனை செய்ய முடியும் என்றும் அநுரகுமார மேலும் தெரிவித்துள்ளார்.

## அரியநேத்திரனுக்கு 'சங்கு' சின்னம்



ஜனாதிபதி தேர்தலில் சுயேச்சையாக தமிழ்ப் பொதுக் கட்டமைப்பின் பொது வேட்பாளராகப் போட்டியிடும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரனுக்கு 'சங்கு' சின்னம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ் தேசியம் சார்ந்த கட்சிகள் மற்றும் சமூக மட்ட சிவில் அமைப்புகள் இணைந்து பொதுக்கட்டமைப்பு ஒன்றினை உருவாக்கி, அரியநேத்திரனை பொது வேட்பாளராக களமிறக்கியுள்ளன.

அந்தவகையில், தமிழ் பொது வேட்பாளர் ப.அஅரியநேத்திரனின் நியமனப் பத்திரம் இன்று காலை ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டதாக தமிழ் பொதுக் கட்டமைப்பு அறிவித்துள்ளது.

அத்துடன் அவர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுகின்ற சின்னம் சங்கு என அறிவிக்கப்பட்டுள்ளது.

# வேலுகுமார் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டார்

## மனோ கணேசன் அறிவிப்பு

ஜனநாயக மக்கள் முன்னணி, தமிழ் முற்போக்கு கூட்டணி தலைமை குழுக்களின் மெய்நிகர் கூட்ட முடிவுகளின்படி நாடாளுமன்ற உறுப்பினர் எம். வேலுகுமார், கட்சி, கூட்டணி பதவிகளில் இருந்து உடனடியாக அமுலுக்கு வரும் விதமாக வெளியேற்றப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது –

'கண்டி மாவட்ட மக்களுக்கும் நமது கட்சிக்கும், இவர் செய்துள்ள துரோகம் மன்னிக்க முடியாததாகும். 2010ம் வருடம் தேர்தலில் கண்டி மாவட்டத்தில் எனக்கு எதிராக கடும் இனவாத வன்முறையில் ஈடுபட்ட அந்த நபருடனேயே இந்த வேலுகுமார் இன்று சென்று சேர்ந்து கரங்கோர்த்து உள்ளார்.

வேலுகுமாரின் கட்சி தாவலின் பின்னணி என்னவாக இருக்கும் என்பதை ஊகிப்பது கடினமானது அல்ல" என்றும் மனோ கணேசன் அறிவித்துள்ளார்.

# வேலுகுமார் எம்.பி. ரணிலுக்கு ஆதரவு

தமிழ் முற்போக்கு கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தனது ஆதரவைத் தெரிவித்துள்ளார்.

தமிழ் முற்போக்குக் கூட்டணி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவை வழங்குவதாக சில நாட்களுக்கு முன்னர் அறிவித்திருந்த நிலையில், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினரான வேலுக்குமார் தனது முடிவை இன்று வியாழக்கிழமை அறிவித்துள்ளார்.

வேலுகுமார், இன்று காலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து ஆதரவளிப்பதாக உறுதியளித்தார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுவை சமர்ப்பிப்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு செல்வதற்கு முன்னர் பிளவர் வீதியில் உள்ள ஜனாதிபதியின் அலுவலகத்திற்கு சென்ற வேலுகுமார் தனது ஆதரவை தெரிவித்துள்ளார்.

### சஜித்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எஸ்.எம்.எம்.முஷாரப் ஆகியோர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவளிக்க தீர்மானித்துள்ளனர்.

இன்று கொழும்பில் அவர்கள் நடத்திய விசேட செய்தியாளர் மாநாட்டில் வைத்து அவர்கள் இந்த ஆதரவினை வெளிப்படுத்தியுள்ளனர்.

### 39.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செப்ரெம்பர் 21 ஆம் திகதி நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் இன்று காலை கொழும்பிலுள்ள தேர்தல்கள் ஆணைக்குழுவில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. காலை 9.00 மணி முதல் 11.00 மணி வரை இந்த நியமனப் பத்திரங்கள் ஏற்கப்பட்டன. இதனை முன்னிட்டு அந்தப் பகுதியில் கடும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

நியமனப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட பின்னர், தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவிக்கையில், "தாக்கல் செய்யப்பட்ட 39 வேட்பு மனுக்களில் 3 வேட்பு மனுக்கள் மீது முன்வைக்கப்பட்ட ஆட்சேபனைகள் மூன்றும் நிராகரிக்கப்பட்டுள்ளன. சமூக வலைத்தளங்கள் ஊடாக தவறான மற்றும் வெறுப்பூட்டும் சித்தரிப்புக்களுடனான பிரச்சாரங்களை மேற்கொள்வதை சிவில் பிரஜைகள் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

ஒரு வேட்பாளருக்கு மாத்திரம் விசேட சலுகை வழங்கும் ஊடகங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்படும். வேட்பாளர்கள் சுற்றுச்சூழல் பாதுகாப்பை கருத்திற்கொண்டு தேர்தல் பிரச்சாரங்களுக்கு பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் ஆகியவற்றை பயன்படுத்துவதை தவிர்த்துக் கொள்ளுங்கள்" என மேலும் அவர் வலியுறுத்தினார்.

# திருக்கோவிலில் இல்மனைட் அகழ்வு பணி இடைநிறுத்தம்

ஜனாதிபதியின் அறிவிப்புக்கு அமைய திருக்கோவிலில் இல்மனைட் அகழ்வு பணி இடைநிறுத்தப்பட்டுள்ளது.

மக்களின் எதிர்ப்பினையும் மீறி நேற்று முன்தினம் புதன்கிழமை "தம்சிலா" நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட இல்மனைட் அகழ்வு ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய நிறுத்தப்பட்டு குறித்த நிறுவனத்தின் ஊழியர்கள் வெளியேற்றப்பட்டனர்.

இதற்கான முழு நடவடிக்கைகளையும் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா. சாணக்கியன், த.கலையரசன் மற்றும் இலங்கை தமிழ் அரசுக் கட்சி வாலிப முன்னணி துணைச்செயலாளர் அ.நிதான்சன் ஆகியோர் மேற்கொண்டிருந்தனர்.

இது நிதான்சன் தெரிவிக்கையில், 'இந்த இடை நிறுத்தம் நிரந்தமானதாக ஆக்கப்பட தொடர்ச்சியாக வலியுறுத்துவோம் அரசுகள் மாறும்போது அமைச்சுக்கள் மாறும்போது முயற்சி இடம்பெற்ற வண்ணமே உள்ளன. இதனால் மக்கள் தொடர்ச்சியான அசௌகரியத்துக்கு உள்ளாகின்றனர் கடல் வளத்தை பாதுகாக்காது இன்று வேறு நாட்டுக்கு விற்கும் நிலை மாற வேண்டும் ஏலவே பெறப்பட்ட சுற்றாடல் அறிக்கையில் பாதிப்புக்கள் உள்ளதாக குறிப்பிடப்பட்டதாக அறிகின்றோம். ஆகவே அவ்வாறான பாதிப்பு மக்களை பாதிக்காதவாறு நாம் மக்களுடன் தொடர்ந்து இருப்போம்" என்று தெரிவித்தார்.

# நலன்களுக்கு கட்சிதாவுவோர் எங்களுடைய கட்சியில் இல்லை

## சஜித் பிரேமதாச சொல்கிறார்



எனது அரசியல் அணியில் உள்ளவர்கள் அரசியல் நலனிற்காக கட்சித் தாவலில் ஈடுபடாதவர்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித்பிரேமதாச தெரிவித்துள்ளார்.

'எனது அணியில் உள்ளவர்கள் மதுபானசாலை அனுமதிப்பத்திரம், காணி உறுதிப்பத்திரம், பணம் போன்றவற்றிற்காக கட்சிதாவாதவர்கள்' என்று அவர் தெரிவித்துள்ளார்.

அரசியல்இலாபங்களிற்காக இரகசிய உடன்பாடுகளில் ஈடுபடுவதை அனுமதிப்பதில்லை என்பது கட்சியின் கொள்கை என்றும் தெரிவித்த சஜித் பிரேமதாச, கட்சியின் உறுப்பினர்களிற்கும் தனிநபர்களிற்கும் இது பொருந்தும் என்றும் தெரிவித்துள்ளார்.

கட்சிக்கு ஏதாவது கிடைத்தால் அதனை நாங்கள் மக்களின் நன்மைக்காக பயன்படுத்துவோம் எனவும் சஜித்பிரேமதாச தெரிவித்துள்ளார்.

என்ன நடந்தாலும் சரி பணத்தை பயன்படுத்தி எவரையும் வாங்கமாட்டோம். அவ்வாறானவர்கள் எங்களுடன் இணைந்து செயற்பட அனுமதிக்கமாட்டோம். அவ்வாறான நபர்கள் எங்கள் பக்கத்தில் இல்லை" என்றும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச மேலும் தெரிவித்துள்ளார்.




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட


காலைக்கதிர் TV YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# யாழ். துணைத் தூதரகத்தில் இந்திய சுதந்திர தின நிகழ்வு









இந்தியாவின் 78 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் இன்று காலை யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகத்தில் இடம்பெற்றது.

இதன் போது யாழ்ப்பாணத்திற்கான இந்திய துணைத் தூதுவர் சாய் முரளி அணிவகுப்பு மரியாதையுடன் அழைத்து வரப்பட்டு இந்திய தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து இந்திய ஜனாதிபதியின் உரையை துணைத்தூதுவர் சாய் முரளி வாசித்திருந்தார்.

இந் நிகழ்வில் துணைத்தூதரக அதிகாரிகள், பணியாளர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




## திருக்கோவிலில் மொழித்தின போட்டி அங்குரார்ப்பண விழா





அகில இலங்கை தமிழ் மொழித்தின போட்டிக்கான கல்முனைக்கல்வி மாவட்ட போட்டி இன்று வியாழக்கிழமை திருக்கோவில் வலயத்திலுள்ள தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது .

திருக்கோவில் வலயக் கல்விப் பணிப்பாளர் இரா. உதயகுமார் தலைமையில் அதன் அங்குரார்ப்பண விழா கோலாகலமாக நடைபெற்றது .

இந்த நிகழ்வில் சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.மகேந்திரகுமார், அக்கரைப்பற்று வலயக்கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.றஹ்மத்துள்ளா ஆகியோர் கலந்து கொண்டார்கள் .

முன்னதாக தமிழ் மொழி தின பண்பாட்டு ஊர்வலம் பலரும் மெச்சத்தக்க வகையில் கோலாகலமாக இடம்பெற்றது .அதன் பிறகு ஏனைய நிகழ்வுகள் ஒன்றன் பின் ஒன்றாக இடம்பெற்றது

# பொது வேட்பாளரை நிறுத்துவதற்கு தமிழ் கட்சிகளுக்கு உரிமையுண்டு!

## நிராரிக்கவில்லை என்கிறார் மனோ கணேசன்



“தமிழ்பொது ஜனாதிபதி வேட்பாளர் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் நிறுத்தியதற்கு வடக்கு கிழக்கு தமிழ்மக்களுக்கும் அவர்கள் சார்ந்துள்ள தமிழ் தேசியக் கட்சிகளுக்கும் பூரண உரிமை உண்டு” என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

தமிழ்பொது ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் சமூக ஊடகம் ஒன்றில் வெளியான கருத்து தொடர்பிலேயே இவ்வாறு மனோ கணேசன் தெரிவித்தார்.

மனோ கணேசன், இது தொடர்பில் மேலும் கூறுகையில், “சில ஊடகங்கள் நான் கூறிய கருத்துக்களை திரிபுபடுத்தி எனது கருத்தாக வெளியிடுவது ஊடக தர்மம் அல்ல. நான் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் தமிழ் பொது வேட்பாளரை நிராகரிக்கவும் இல்லை. எதிர்க்கவும் இல்லை. ஏனெனில் தமிழ் பொது வேட்பாளர் நியமிக்கப்பட்டமை கண்ணியமானதும் நியாயமானதுமான விடயம்” என்று தெரிவித்தார்.

“தமிழ்பொது வேட்பாளரை நிறுத்துவதற்கு வடக்கு ,கிழக்கு தமிழ் கட்சிகள் முயற்சி எடுத்தன. அது அவர்களின் உரிமை. அதே நேரத்தில் வடக்கு, கிழக்கில் உள்ள சில கட்சிகள் அதனை எதிர்க்கின்றன அதுவும் அவர்களது

உரிமை” என்று குறிப்பிட்ட மனோ கணேசன், “தமிழ் பொது வேட்பாளர் வடக்கு ,கிழக்கு சார்ந்து தாயகம் தேசியம் சுயநிர்ணய உரிமை என்பவற்றின் வெளிப்பாடாக தங்களது கோரிக்கை நாட்டுக்கும் சர்வதேசத்துக்கும் வெளிப்படுத்துவதற்காக ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளர் போட்டியிடுகிறார்” என்று தெரிவித்தார்.

“வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் கொள்கை வெளிப்படுத்தப்பட வேண்டும். அதில் எனக்கு மாற்று கருத்துக்கு இடமில்லை” என்று தெரிவித்த மனோ கணேசன், “ஆனால், பொது வேட்பாளர்என்ற கோஷத்தை வடக்கு கிழக்குக்கு வெளியில் கொண்டு வராதீர்கள் என கூறியது உண்மை. ஏனெனில் அதற்கு நியாயமான காரணம் உண்டு. தமிழ் மக்கள் தமது அரசியல் அபிலாசைகளை வென்றெடுப்பதற்கு வடக்கு, கிழக்கு சார்ந்து கோரிக்கைகளை முன்வைத்து தமது அரசியல் செயல்பாடுகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

அவர்களது கோரிக்கை வடக்கு, கிழக்குக்கு உள்ளே பேசப்படுவது நியாயமானது எனக் கூறினேன். தவிர வேறு எந்த ஒரு அர்த்தத்திலும் போது வேட்பாளர் தொடர்பில் கருத்து தெரிவிக்கவில்லை.

சில ஊடகங்கள் எனது கருத்தை திரிவுபடுத்தி தமக்கு ஏற்ற வகையில் மாற்றி எனது கருத்தாக கூறுவது ஊடக தர்மம் அல்ல. ஆகவே தமிழ் பொது வேட்பாளர் வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் அவை சார்ந்த தமிழ் கட்சிகள் எடுக்கும் முடிவுகளில் நான் தலையிட போவது இல்லை என்றார்.




# ரணில் போட்டியிடுவதை நீதிமன்றம் தடுக்குமா?

## உயர் நீதிமன்றத்தில் தாக்கலான மனு



நீதி அமைச்சராக அலி சப்ரியை நியமித்ததன் மூலம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அரசியலமைப்பை மீறி அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்துள்ளமையால் ஜனாதிபதி வேட்பாளராக ரணில் விக்ரமசிங்க போட்டியிடுவதற்கு தடைவிதிக்குமாறு உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சட்டத்தரணி சான் ரணசூரியவால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுவில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, சட்டமா அதிபர் மற்றும் நாடாளுமன்றம் என்பன பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளன. அரசியலமைப்பின் 30 (1) பிரிவின் கீழ் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக சத்தியப் பிரமாணம் செய்துள்ளதோடு, நாட்டின் அரசியலமைப்பை பாதுகாக்க நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளார். அத்துடன், அரசியலமைப்பின் 107(7) பிரிவின்படி, உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றங்களுக்கு நீதிபதிகளை நியமிக்கும் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசியலமைப்பின் பிரகாரம் உயர் நீதிமன்ற நீதிபதிகளை நியமிக்காததன் மூலம் அரசியலமைப்பு விதிகளை ஜனாதிபதி மீறியுள்ளார் என தெரிவித்துள்ள மனுதாரர், பதில் பொலிஸ் மா அதிபர் ஒருவரை நியமிக்கூகாமல் பொது மக்களின் பாதுகாப்பிற்கு ஆபத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேசபந்து தென்னகோன் பொலிஸ் மா அதிபராக கடமையாற்றுவதையும் அதிகாரங்களை செயற்படுத்துவதைத் தடுக்கும் வகையிலும் கடந்த 24ஆம் திகதி உயர் நீதிமன்றம் இடைக்கால உத்தரவு பிறப்பித்துள்ளதாகவும் பதில் பொலிஸ் மா அதிபரை நியமிப்பதற்கு ஜனாதிபதிக்கு எவ்வித தடையும் இல்லை என இடைக்கால உத்தரவில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆனால் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தம்மை வேட்பாளசூராக முன்னிறுத்தியதால் பதில் பொலிஸ் மா அதிபரை நியமிக்கும் அதிகாரம் தனக்கு இல்லை என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். ஆனால் அவ்வாறு கூறிய ஜனாதிபதி, அமைச்சர் அலி சப்ரியை நீதி அமைச்சராக நியமித்துள்ளதாகவும் இந்த நடவடிக்கைகளின் மூலம் ஜனாதிபதி வேண்டுமென்றே அரசியலமைப்பை மீறி தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்துள்ளதாக மனுவில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எனவே, அவரை ஜனாதிபதி தேர்தல் வேட்பாளராக முன்னிறுத்துவது பொருத்தமற்றது எனவும் இந்த நடவடிக்கையின் மூலம் மக்களின் அடிப்படை மனித உரிமைகளை ஜனாதிபதி மீறியுள்ளார் என தீர்ப்பு வழங்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் திணைக்களத்தைச் சேர்ந்த பொருத்தமான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஒருவரை பதில் பொலிஸ் மா அதிபராக நியமிக்குமாறு ஜனாதிபதிக்கு உத்தரவு பிறப்பிக்குமாறும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக நிற்க தற்போதைய ஜனாதிபதி தகுதியற்றவர் எனத் தீர்ப்பளிக்கூகுமாறும் மனுதாரர் உயர் நீதிமன்றத்திடம் கோரியுள்ளார்.

இதற்கு மேலதிகமாக எதிர்வரும் செப்டெம்பர் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்ரமசிங்க வேட்பாளராக களமிறங்குவதைத் தடுக்கும் இடைக்காலத் தடையுத்தரவை பிறப்பிக்குமாறும் மனுதாரர் உயர் நீதிமன்றத்திடம் மேலும் கோரியுள்ளார்.

# அநுரவின் அலுவலகம் கிளிநொச்சியில் திறப்பு






நாடு அநுர வோடு என்ற தொனிப்பொருளில் தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் அலுவலகம் இன்றைய தினம் நாடுபூராகவும் திறந்து வைக்கப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்திற்கான தேர்தல் அலுவலகம் கிளிநொச்சி தொண்டமா நகரில் திறந்து வைக்கப்பட்டது. தேசிய மக்கள் சக்தியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் ம.மோகன் தலைமையில் நடைபெற்ற கட்சி அலுவலக திறப்பு விழாவில் கட்சி ஆதரவாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.113

# மகிழடித்தீவு மாணவன் சாதனை





அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மல்யுத்தப் போட்டியில் 16 வயதுக்குட்பட்டோருக்கான ஆண்கள் பிரிவில் கலந்து கொண்ட மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட மகிழடித்தீவு சரஸ்வதி மகா வித்தியாலய மாணவன் ம. பவிசனன் 3 வது இடத்தை பெற்று வெண்கலப் பதக்கத்தினை தனதாக்கிக்கொண்டார்.

அண்மைக்காலமாக மகிழடித்தீவு சரஸ்வதி மகா வித்தியாலய மாணவர்கள் தேசிய ரீதியில் பதக்கங்களை பெற்று வந்துள்ளது என்று வித்தியாலய அதிபர் செ.ஜமுனாகரன் தெரிவித்தார்.

தனது கன்னி முயற்சியில் தேசிய ரீதியில் இம் மாணவன் சாதித்திருப்பது எதிர்காலத்தில் இன்னும் பல சாதனைகளை இம் மாணவன் படைப்பான் என்பதையே பறைசாற்றுகிறது என வித்தியாலய சிரேஸ்ட ஆசிரியை திருமதி நளினி அகிலேஸ்வரன் தெரிவித்தார்.

இம்மாணவனை தேசியத்தில் சாதிக்க வழிசமைத்த பாடசாலையின் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் நி.நிசோத் மற்றும் உடற்கல்வி ஆசிரியர் கை.தெய்வேந்திரகுமார் ஆகியோருக்கும் பாடசாலையின் விளையாட்டுத்துறைசார் வளர்ச்சியில் பக்கபலமாக இருக்கு வலயக்கல்விப்பணிப்பாளர் உள்ளிட்ட வலய கல்வி அதிகாரிகள் உடற்கல்வி பாடத்துறைக்கான உதவிக்கல்விப் பணிப்பாளர் மற்றும் ஆசிரிய ஆலோசகர் ஆகியோர்களுக்கும் பாடசாலையின் கல்விச் சமூகத்தினர் நன்றியினை தெரிவிக்கின்றனர்.

நான்கு வகை நிலத்திலும் காணி விற்பனைக்கு!
வடக்கு (யாழ்ப்பாணம்) - கிழக்கு (மட்டக்களப்பு) - மலையகம் (பதுளை)

கி.அரியாலை
மருதம்
வயலுடன் கூடிய மேட்டுக்காணியும் பண்ணை வீடும் பொழுதுபோக்குகளும்...!

எழுதுமட்டுவாழ்
முல்லை
மரங்கள் நிறைந்த இயற்கை சூழலில் ஓய்வுகால வீட்டிற்கான காணித் துண்டுகள்...!

மட்டக்களப்பு
நெய்தல்
கடலும் ஆறும் அடுகடுகே அமைந்த மீன்பாடும் தேன்நாட்டில் விடுமுறை வீட்டிற்கு...!

அப்புத்தளை
குறிஞ்சி
மலைகளின் நடுவில் குளிர்ந்த பிரதேசத்தில் வாசனைத் திரவியமும் சுற்றுலா விடுதியும்...!

காணி கொள்வனவிற்கு : 0777 43 5557

# சிறுதானிய உற்பத்தியை அதிகரிக்க வலியுறுத்தி விழிப்புணர்வுப் பயணம்





மாங்குளம் ஒலுமடுவில் உள்ள கே.கே. இயற்கை முறை பண்ணையில் இடம்பெறும் சிறுதானிய உணவுத் திருவிழாவை முன்னிட்டு சிறுதானிய உற்பத்தியை அதிகரிக்க வலியுறுத்தி கிளிநொச்சியிலிருந்து மாங்குளம் ஒலுமடு வரை துவிச்சக்கரவண்டி விழிப்புணர்வு பயணம் இன்று காலை இடம்பெற்றது.

உடல் ஆரோக்கியத்திற்கு இன்றியமையாத சிறுதானிய உற்பத்தியை அதிகரிக்க வலியுறுத்தி குறித்த துவிச்சக்கர வண்டி பயணம் இன்று காலை கிளிநொச்சி அம்மாச்சி உணவகத்திற்கு முன்பாக ஆரம்பித்து மாங்குளம் ஒலுமடுவில் உள்ள கே.கே. இயற்கை முறை பண்ணையில் நிறைவடைந்தது.

குறித்த ஆரம்ப நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் சூ.ஜெகதீஸ்வரி, கிளிநொச்சி மாவட்ட கமக்கார அமைப்புக்களின் சம்மேளன தலைவர் சு.யதீஸ்வரன், முருகானந்தா கல்லூரியின் முதல்வர் அ.பங்கயற்ச் செல்வன் ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர்.

இந்திரா குழுமத்தின் பணிப்பாளர் ம.ரஜீதன் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட குறித்த துவிச்சக்கர வண்டி பயணத்தில் யாழ் பல்கலைக்கழக கல்லூரி பண்ணை இயந்திரவியல் மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.







## கல்முனை மாநகர வர்த்தக நிலையங்களில் பரிசோதனை



கல்முனை மாநகர சபையின் வருமான வாரத்தை முன்னிட்டு ஒழுங்கு செய்யப்பட்ட வர்த்தக நிலையங்கள் மீதான களப் பரிசோதனை நடவடிக்கை நேற்று புதன்கிழமை பெரிய நீலாவணையில் மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸ் தலைமையில் கணக்காளர் வை. ஹபீபுல்லாஹ்வின் நெறிப்படுத்தலில் வெற்றிகரமாக இடம்பெற்றது.

மூன்றாவது நாளாக நடைபெற்ற இக்களப் பரிசோதனை நடவடிக்கையில் மாநகர சபையின் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம், பொறியியலாளர் ஏ.ஜே.ஏ.எச். ஜௌஸி, பிரதம சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் அர்ஷாத் காரியப்பர், நிதி உதவியாளர் யூ.எம். இஸ்ஹாக், வருமான பரிசோதகர்களான ஏ.ஜே. சமீம், எம். உபைதுல்லாஹ், எம்.எம். ரைஹான், சுகாதாரப் பரிசோதகர்களான ஜே.எம். நிஸ்தார், எம். எம். பாறுக், அபிவிருத்தி உத்தியோகத்தர்களான நாகரத்தினம், எம்.சி.எம்..நுஸ்ரத் உள்ளிட்டோரும் பங்கேற்றிருந்தனர்.

கல்முனை மாநகர சபை ஆட்புல எல்லையினுள் அமைந்துள்ள வர்த்தக நிலையங்கள் மாநகர சபையின் வியாபார அனுமதிப் பத்திரம் பெற்றிருப்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு வருமான வாரம் பிரகடனப்படுத்தப்பட்டு, கடந்த திங்கட்கிழமை தொடக்கம் அதற்கான களப்பரிசோதனை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதன்போது வர்த்தக நிலையங்களில் வியாபார அனுமதிப் பத்திரம் பரீட்சிக்கப்பட்டு, இதுவரை இந்த ஆண்டுக்கான அனுமதிப் பத்திரத்தை பெற்றிராத வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதுடன் அப்பத்திரத்தை அவர்கள் இலகுவாக பெற்றுக் கொள்வதற்காக அதே இடத்தில் ஆரம்ப நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன.

அத்துடன் ஏற்கனவே வியாபார அனுமதிப் பத்திரம் பெற்றிருந்த வர்த்தக நிலையங்களுக்கும் புதிதாக அதனைப் பெறுவதற்காக கட்டணம் செலுத்தப்பட்ட வர்த்தக நிலையங்களுக்கும் “நேர்த்தியான வரியிறுப்பு நிறுவனம்” எனும் வாசகம் பொறிக்கப்பட்ட ஸ்டிக்கர் ஒட்டப்பட்டு, காட்சிப்படுத்தப்பட்டன

அதேவேளை உணவகங்கள் மற்றும் தொழிற்சாலைகளின் சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் விடயங்களும் இதன்போது பரிசோதிக்கப்பட்டு, தேவையான அறிவுறுத்தல்கள்வழங்கப்பட்டன. குறிப்பாக சில உணவகங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் அவதானிக்கப்பட்ட சுகாதார மற்றும் சுற்றுச்சூழல் சீர்கேடுகளை உடனடியாக நிவர்த்தி செய்யுமாறு பணிக்கப்பட்டதுடன் கால அவகாசமும் வழங்கப்பட்டது.




# இரு பேருந்துகள் மோதி விபத்து 19 பேர் படுகாயம்

அநுராதபுரம்-பதெனியபிரதான வீதியின் ஸ்ரவஸ்திபுர சந்திக்கு அருகில் இரு பேருந்துகள் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற மாணவர் பேருந்தொன்றும் பணிப்பெண்களை ஏற்றிச் சென்ற பேருந்தும் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

இந்த விபத்தில் பாடசாலை மாணவர்கள் மற்றும் பெண்கள் உட்பட 19 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அனுராதபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற பேருந்து ஸ்ரவஸ்திபுர சந்திக்கு அருகில் பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்வதற்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போது, பின்னால் வந்த பேருந்து மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் நான்கு மாணவர்களும், 14 பணிப பெண்களும் காயமடைந்து அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம்தொடர்பில் ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களை ஏற்றிச் சென்ற பேருந்தின் சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளனர்.



# மியன்மார் தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கையர்கள் 20 பேர் விடுதலை

மியான்மாரின் மியாவாடியில் உள்ள சைபர் மையங்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 54 பேரில் 20 இலங்கையர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை இலங்கைக்கு திருப்பி அனுப்புவதற்காக குடிவரவு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

மியன்மாருக்கான இலங்கைத் தூதுவர் பிரபாஷினி பொன்னம்பெரும தெரிவிக்கையில் விடுவிக்கப்பட்டவர்கள் எல்லைப் பகுதி ஊடாக தாய்லாந்துக்கு அனுப்பப்பட்டுள்ளதனை உறுதிப்படுத்தியுள்ளார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.08.2024இல் வெளியிடப்பெற்றது.